# தொலை நோக்குப் பார்வையுடன் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கை!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டு பேட்டி!



சென்னை, மார்ச். 19 –

"தொலை நோக்குப் பார்வையுடன் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கூறியுள்ளார்.

சென்னையில் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்ட வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள ம.தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு அமைத்து மூன்றுவாரம் தமிழகத்தின் பல பகுதியிலிருந்து வந்த பரிந்துரைகளை செய்து 72 பக்க தேர்தல் அறிக்கை 51 பிரிவுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. கொள்கை லட்சியங்கள், நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள், முக்கியநிலைப் பாடு குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ளோம்.

மாநிலத்தில் சுயாட்சிதான் இந்திய ஜனநாயகத்தை கூட்டாட்சியில் தத்துவத்தையும் நிலைநாட்டி அனைத்து மாநிலங்களுக்கும் தேவை என்பதையும், கவர்னர்பதவி அகற்றப்பட வேண்டிய ஒன்று என்றும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கவர்னர் பதவி ஜனநாயகத்திற்கு கேடு விளைவிக்கிறது.

**முதல்வர் விரைந்து நடவடிக்கை எடுக்கிறார்!**

'அமெரிக்க ஐக்கிய நாடுகள் போல இந்திய ஐக்கிய நாடுகள் என அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. தொலை நோக்கு கண்ணோட்டத்தில் இந்த அறிக்கை தயாரித்திருக்கிறோம்.

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை குறைந்து இருக்கிறது. முதலமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுத்துவருகிறார். விளாத்தி குளம் மாணவி சம்பவத்திலும் பாலியல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றங்களுக்கு முக்கிய காரணம் போதைப் பொருள் பழக்கமாகும். போதைப் பொருள் பயன்பாட்டை தடுக்க புதிய சட்டம் கொண்டு வர வேண்டும்.

தி.மு.க. கூட்டணியில் நிறைய கட்சிகள்இடம்பெற் றுள்ளன. அதனால் முதல் அமைச்சருக்கு பல நெருக்க டிகள் ஏற்பட்டு உள்ளது. நிறைய கட்சிகளின் நிர்ப்பந்தம் இருக்கிறது.

**கலைஞரிடம் வாக்கு அளித்திருக்கிறேன்!**

எனது 63 வருடஅரசியல் வாழ்வில் 32 வருடம் தி.மு.க.வுடன் பயணித்திருக்கிறேன். கலைஞரின் இறுதி நாட்களில் நான் அவரிடம் ஒரு வாக்கு கொடுத்தேன். ஒரு காலத்தில் உங்களுக்கு பக்கபலமாகநான்இருந்தது போல தம்பி ஸ்டாலினுக்கும் உறுதுணையாக இருப்பேன் என்று வாக்கு கொடுத்தேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இதனை ஏற்றுக் கொண்டேன். அந்த நிலையில் என் கையை முதலமைச்சர் பிடித்துக் கொண்டார்.

அவர் சொன்ன தொகுதிகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். எங்கள் கட்சி நிர்வாகிகளுக்கு அது சற்று வருத்தமளித்தாலும் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். தொகுதிகள் குறைத்ததை பொருட்டாக நினைக்கவில்லை.

**மோடி அமெரிக்காவின் ஊதுகுழலாக செயல்படுகிறார்!**

கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு முடிந்த பிறகு எந்த தொகுதியில் போட்டியிடுவதுஎன்பதைப் பற்றி முடிவு செய்வோம். சமையல் கேஸ் தட்டுப்பாட்டுக்கு பிரதமர் மோடிதான் காரணம்.

அவர் அமெரிக்காவின் ஊதுகுழலாக செயல்படுகி றார். கனிம வளம் பிற மாநி லங்களுக்கு கடத்தப்படுவதை தடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியு றுத்தி வருகிறோம்.

இவ்வாறு வைகோ அவர்கள் கூறினார்.

---

## வேலூர் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய

# மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் வென்றிட தீவிர களப்பணியாற்றுவோம்!

## மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

*வேலூர், மார்ச் 19 -*

*வேலூர் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் வென்றிட தீவிர களப் பணியாற்றுவோம் என்று வேலூர் தெற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடைபெற்றது தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார்.*

*நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன் மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, முனைவர் எம்.பிர பாத்குமார் மாவட்ட பொருளாளர் எஸ்.தாமோதரன், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன், செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.ஏழுமலை, ஏ.ஜி.ஆறுமுகம், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் ராஜேஸ்வரி, மோகன் காந்தி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:*

*வெல்வோம் 200 படைப்போம் வரலாறு என்ற வெற்றி இலக்குடனும் தமிழ்நாடு வெல்லட்டும் ஸ்டாலின் தொடரட்டும்என்றமுழக்கத்துடனும் எதிர்வரும் 2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தங்களது வாக்குகளை வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திலும் நமது மதச்சார்பற்ற கூட்டணியினரின் சின்னங்களிலும்அளித்திட அயராது பாடுபட்டு திராவிட மாடல் 2.0 அமையும் நாள் வரை ஊன் உறக்கமின்றி அயராது தேர்தல் களப்பணி ஆற்றிடுவோம்.*

*வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு ட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் கழக தலைவர் அறிவிக்கும் வேட்பாளர்களின் வெற்றிக்கு ஒத்த கருத்துடன் தேர்தல் களப்பணி ஆற்றி 3 தொகுதிகளிலும் வெற்றிக்கனி பறித்து கழகத் தலைவர் அவர்களின் கரங்களில் சேர்த்திட இன்று முதல் தேர்தல் களப் பணி ஆற்றிட ஆயத்தமாகுவோம் .*

*மதம் மற்றும் மொழி துவேச அரசியலை தனது அடிமை அதிமுக வுடன் கூட்டு சேர்ந்து தமிழ் நாட்டை கபளீகரம் செய்து அதன்மூலம் ஆர்.எஸ்.எஸ் சின் கொள்கைகளை நிறை வேற்ற துடிக்கும் ஒன்றிய பாசிசபாஜகவை*

*நமதுமதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஒருமித்த பலத்தோடு தோற்கடித்து அதன் மூலம் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சியை கழக தலைவர் அவர்கள் தலைமையில் இரண்டாவது முறையாக அரியணையில் ஏற்றி தமிழ் நாட்டை உலக அரங்கில் அனைத்திலும் சிறந்த மாநிலம் எனபோற்றிடும் வகையில் ஒன்றிணைவோம் வெல்வோம் ஒன்றாக என சபதம் ஏற்று களப்பணி ஆற்றிடுவோம் .*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

---

# தலைவன்!



**அ**ன்பையே
நடைமுறையாய்
அழகாக்குபவன்
தலைவன்..

அடுத்த தலைமுறைக்கும்
அதனை
நினைவாக்குபவன்
தலைவன்..

களையையும்
பயிராக்கும்

கலை
அறிந்தவன்
தலைவன்

அந்த
பயிரினையும்
எதிர்கால
சந்ததிக்கு

விதையாக்குபவன்
தலைவன்

பாறையிலும்
தடம் பதிக்கும்

திறம்
வாய்ந்தவன்
தலைவன்

தன்
பாதையையே
பிறர் படிக்க

பாடமாக்குபவன்
தலைவன்

ஓர நின்று
பார்த்தாலும்

உள்ளம்
ஈர்ப்பவன்
தலைவன்

உற்று நோக்கி
கண்டாலோ

நம் உதிரம்
கலப்பவன்
தலைவன்

விழுந்தாலும்
வினாடியில்
எழுந்தாள்பவன்
தலைவன்

வெற்றிக்கு
உழைப்பை
விழுதாக்குபவன்
தலைவன்

ஈகைக்கு
இலக்கணமாய்
இருப்பவன்
தலைவன்

எதிரிக்கும்
இன்னல் என்றால்

இரக்கம்
சுரப்பவன்
தலைவன்

அகமும் புறமும்
மக்களை
ஆட்கொள்பவன்
தலைவன்..

அகிலத்தை
அழகாக்கும்

அறிவோவியம்
தலைவன்

முகம் காட்டும்
திசையில்

மக்களை
நகம் நீட்ட
வைப்பவன்
தலைவன்

எங்கள்

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலினே

முக்கடல் சூழ்ந்த
பாரதத்தில்

முதல்வர்களுக்கு
எல்லாம்
முதல்வன்.

மூன்றாம்
மாதத்தின்

முதல் நாளில்
அவதரித்த

முத்தமிழின்
புதல்வன் .

தமிழுலகை
தலை குனியாது

தற்காக்கும்
தலைவர்களுக்கு
எல்லாம்
தலைவன்..

வாழ்க வாழ்கவே....

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

---

## கழக அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்வோம்!

# செஞ்சி, மைலம், திண்டிவனம் தொகுதியில் மிகப்பெரிய வெற்றி பெறுவோம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்,எல்,ஏ, அறிவுறுத்தினார்!

செஞ்சி, மார்ச் 19 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனை திட்டங்களை வாக்காளர்களிடம் கூறி செஞ்சி, மைலம், திண்டிவனம்தொகுதியில் மிகப் பெரிய வெற்றிக்கு நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏஅறிவுறுத்தினார்

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசரசெயற்குழு ஆலோசனை கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்குமாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமை தாங்கினார்.

மைலம் தொகுதி பார்வையாளர்கடலூர் இள. புகழேந்தி,மாவட்ட துணை செயலாளர்கள்ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார்,செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனிராஜ்,மாவட்ட பொருளாளர் ரமணன்,ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழுஉறுப்பினர் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாவட்ட செயலாளர்களுடன் கூட்டம் நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.முதலமைச்சரின் வழிகாட்டுதல்படி விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகியசட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணியாற்றுவது தொடர்பாகவும், கூட்டணி கட்சியினரை ஒருங்கிணைப்பது,பிரச்சாரங்களை மேற்கொள்வது, திமுக அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடாக எடுத்துச் சென்று மக்களிடையே விளக்கி வாக்கு சேகரிக்க வேண்டும் நமக்கு மிகப் பெரிய பக்கபலமே மகளிர்கள் தான் அந்த வகையில் மகளிர்களுக்கு கழகத் தலைவர்கொண்டு வந்துள்ள சாதனைகளான மகளிர் விடியல் பயணம் ,கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண், மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன் உதவி போன்ற பொருளாதார ரீதியிலான பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் செயல்படுத்தி உள்ளார். அது மட்டும் இல்லாமல் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் ஐந்தாயிரமும், தற்போது மாற்றுத்திறனாளிகள் ,முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு 2000. அறிவித்துள்ளார். இது போன்ற அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி இருக்கிறார்.மேலும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில்மகளிர் உரிமைத் தொகை 2000 ஆக வழங்கப்படும் கூறியுள்ள முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் மேலும் பல திட்டங்களையும் செயல்படுத்தஉள்ளதாக தெரிவித்துள்ளார்.முதலமைச்சரின் திட்டங்களையும் முதலமைச்சர் தெரிவித்துள்ள வாக்குறுதிகளை

மக்களிடம் கொண்டு சேர்த்து செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் திமுக வெற்றிக்கு அனைத்து நிர்வாகிகள், கழகத்தினர்கள் கடுமையாக உழைத்து தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா,பொதுக் குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி,சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி, ராஜாராமன்,மணிமாறன், செழியன், விஜயராகவன், பச்சையப்பன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன்,சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், அனந்தபுரம் பேரூர் தலைவர் முருகன், செஞ்சி துணைச் சேர்மன் ஜெயபாலன், அணிஅமைப்பாளர்கள் ,பிரசன்னா, திலகவதி, ராஜசக்தி, கேஅன்சாரி ,திருமலை, எஸ். விஜயராகவன், சிவகாமி, தமிழரசன்,ரோமியன் உள்ளிட்ட மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

---

# உதயசூரியன் போல் எழுவாய்!



**கொ**ல்லி மலைத்தேன்
அமுதம் குழைத்துச்
சொல்லில் வடிப்பவனே!.. முப்பால்
சுவைத்துக் குடிப்பவனே!
வில்லின் கணைபோல்
வெற்றி இலக்கைச்
சொல்லி அடிப்பவனே!.. வாகை
சூடி முடிப்பவனே!

புல்லினத் தாரைப்
பொறாமை மனிதரை
எள்ளி நடப்பவனே!.. தடைகள்
எளிதில் கடப்பவனே!
தில்லியின் தேசிய
விருதுகள் அனைத்தும்
அள்ளிக் குவித்தவனே!.. தனிஓர்
ஆற்றல் மிகுத்தவனே!

ஈடு படும்தன்
இலக்கியப் பணியில்
பாடிச் சுழன்றவனே!.. பூமிப்
பரப்பை அளந்தவனே!
காடு மலைசூழ்
"கருவாச் சிக்கும்"
காவியம் புனைந்தவனே!.. கள்ளிக்
காட்டில் விளைந்தவனே!

நீடு நெடும்புகழ்ச்
சிகரம் ஏறி
நின்று நிமிர்ந்தவனே!.. தமிழர்
நெஞ்சம் கவர்ந்தவனே!
பீடு மிகுசெந்
தமிழன் னைக்கோர்
பெருமை கொணர்ந்தவனே!. 'ஞான
பீடம்' அமர்ந்தவனே!

"அங்கம் மாள்"தாய்க்
கருப்பைக் குள்ளே
அலையாய் புரண்டவனே!.. புதிய
அறிவாய் திரண்டவனே!
சிங்கம் "இராம
சாமி"யின் வடிவில்
சிலிர்த்துப் பிறந்தவனே!..தன்னைச்
செதுக்கிச் சிறந்தவனே!

மங்காத கருப்பு
வைரமே! எங்கள்
மானத் தமிழ்மகனே!.. வைகை
மண்ணின் அணிகலனே!
வங்கக் கடல்போல்
வழங்கித் தமிழை
முழங்கும் நாயகனே!.. கொற்கை
முத்துப் போன்றவனே!

வீழ்த்த நினைப்போர்
விமர்ச னங்களை
வீதியில் போடுகின்றாய்!..இன்னும்
வீரியம் கூடுகின்றாய்!
காழ்ப்பை உமிழும்
நாக்குக ளுக்கும்
நலமே பாடுகின்றாய்!..ஜீவ
நதியாய் ஓடுகின்றாய்!

வாழ்த்திடக் "கலைஞர்"
இல்லை யே!என
வருந்தி வாடுகின்றாய்!..பெற்றோர்
மடிகளைத் தேடுகின்றாய்!
சூழ்ச்சிகள் தோற்கும்!
தொடர்ந்து படைப்புகள்
சுயமாய் நீதருவாய்!.. உதய
சூரியன் போல்எழுவாய்!

அன்றொரு நாள்,பொன்
மாலைப் பொழுதில்
அடிகள் எடுத்துவைத்தாய்!.. திரையில்
அழகின் சிரிப்புவைத்தாய்!
என்றும் வாழும்
கண்ண தாசனின்
இடத்தில் கவனம்வைத்தாய்!.. புதிய
தடத்தில் பயணம்வைத்தாய்!

ஒன்று போலவே
ஒன்றெதற் கென்றே
உனக்கோர் நடைவகுத்தாய்!..
தனக்கே
உரிய இடம்பிடித்தாய்!
வென்று காட்டுவாய்!
விரைவில் உலக
விருதுகள் நீபெறுவாய்!..திசைகளின்
விழாவில் உலாவருவாய்!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

---

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

*விழுப்புரம், மார்ச் 19 -*

*விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று (19.03.2026 - வியாழக்கிழமை ) மாலை 4.00 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடை பெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்குகிறார்.*

*சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், சிவ. ஜெயராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி , மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற் ற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்தல் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய குழு தலைவர்கள், நகர மன்ற தலைவர், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், அனைவரும் தவ றாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*